# தமிழ்

# 4

## பேசுதல் வாசித்தல்

**தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு**

Shagiththiya
Sivapalan

பாடம்

# 1

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# தமிழ்மொழி

உலகில் தொன்மை மிக்க மொழிகள் சில உள்ளன. அவற்றுள் தமிழும் ஒன்று. திராவிட மொழிகள் தமிழை மூலமொழியாகக் கொண்டவை. உலகமொழிகள் பலவற்றில், தமிழ்ச்சொற்கள் உள்ளன. தமிழ் மிகச்சிறந்த அறநூல்களையும் இலக்கியங்களையும் கொண்ட மொழியாகும். தமிழுக்கு இனிமை என்றும் பொருள் உண்டு. தமிழ் எமது தாய்மொழி.

தமிழில் உள்ள முதல் எழுத்துகள் முப்பது. அவையாவன உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய் எழுத்துகள் பதினெட்டும் ஆகும். உயிர் எழுத்துகள் தனித்து இயங்கக் கூடியவை. மெய் எழுத்துகள் தனித்து இயங்கமாட்டா. உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் புணர்ந்து, உயிர்மெய் எழுத்துகள் (216) உருவாகின்றன. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் 247. தொல்காப்பியம் தமிழின் இலக்கணநூல். இலக்கண நூல்களில் இதுவே முதன்மையானது.

தமிழ்மொழி, இயல் இசை நாடகம் என மூன்று பிரிவுகளை உடையது. அதனால், அது முத்தமிழ் எனப் போற்றப்படுகிறது. தமிழ்மொழிக்குரிய சிறப்புகளில் இதுவும் ஒன்றாகும். 'ழ' என்ற ஒலி தமிழுக்கு மட்டுமே உரிய சிறப்பு ஒலியாகும். புலவர்கள் தமிழைத் தீந்தமிழ், செந்தமிழ் என்று போற்றுவர்.

ஆதியில் இருந்தே ஈழமும் தமிழகமும் தமிழரின் தாயகங்கள். மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளில் தமிழர் அதிகளவில் வாழ்கின்றனர். தமிழர் இன்று உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர். அங்கெல்லாம் அவர்களால் தமிழ் பேசப்படுகிறது.

**விடை சொல்வோம்:**

1. திராவிட மொழிகளின் மூலமொழி எது?
2. தமிழ் மொழியில் உள்ள முதல் எழுத்துகள் எத்தனை?
3. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் எத்தனை?
4. முத்தமிழ் எனப்படுபவை யாவை?
5. இலக்கண நூல்களில் முதன்மையானது எது?
6. தமிழுக்கு மட்டும் உரிய சிறப்பு ஒலி எது?

**அருஞ்சொல் விளக்கம்:**

தொன்மை - மிகப்பழைமை

அறநூல்கள் - ஒழுக்கத்தைக் கூறும் நூல்கள்

புணர்ந்து - சேர்ந்து

ஆதி - தொடக்கம்

## குறள்:

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு**

( அதிகாரம் 40 - குறள் 396)

*தோண்டுகிற அளவுக்கு நீர் ஊறும் கேணி (மணற்கேணி). அதுபோல், மக்கள் கற்கிற அளவுக்கு அறிவு ஊறும்.*

*எவ்வளவு ஆழமாக மண்ணைத் தோண்டுகின்றோமோ அவ்வளவுக்கு அதிகமாக நீர் ஊறிவரும். அதுபோல் மக்கள் எவ்வளவு அதிகமாகக் கற்கின்றனரோ அவ்வளவுக்கு அதிகமாக அறிவுப் பெருக்கம் ஏற்படும்.*

## பழமொழி:

**தன்பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்.**

*(தகுதி அறிந்து அவையில் தோன்று.)*

## நொடி:

**வெட்டினால் வெட்டுப்படார்; கட்டினால் கட்டுப்படார்;**
**விட்டுப் பிரியமாட்டார்; கிட்டவே வருவார்.**

பாடம்

# 2

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# தமிழினியின் நாட்குறிப்பில் ஒரு நாள்

19.10.09

இன்று நல்ல மகிழ்ச்சியான நாள். தமிழ்ப்பள்ளி தொடங்குவதற்கு முன்னதாகவே நான் அங்கு போயிருந்தேன். குறிஞ்சியும் குழலியும் எனக்காகக் காத்திருந்தனர்.

தமிழ்ப் பாடம் முடிந்ததும் குறிஞ்சி பரதநாட்டிய வகுப்புக்குச் சென்றார். நானும் குழலியும் வீணை பயிலப் போனோம். வீணை வகுப்பில் இன்று புதிய பாடல் ஒன்றைப் பயின்றோம். நான் அப்பாடலை நன்றாக வாசிப்பதாக ஆசிரியர் கூறினார்.

வகுப்புமுடிந்து வெளியே வந்தபோது அப்பா தமது நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டு இருந்தார். அது ஊரைப்பற்றியதாகத்தான் இருந்திருக்கும். குழலியும் நானும் களைக்கும் வரை விளையாடினோம்.

பின்பு அப்பாவும் நானும் அங்காடிக்குச் சென்றோம். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கினோம். பின்பு வீட்டுக்குத் திரும்பினோம். வீடு திரும்பும் போது நன்றாக இருட்டி விட்டது. வீடு வந்ததும் சிறிது நேரம் தொலைக்காட்சி பார்த்து விட்டு, உணவு உண்டபின் பல்துலக்கி, எனது அறைக்குச் சென்று உறங்கிவிட்டேன்.

**விடை சொல்வோம்:**

1 தமிழ்ப்பள்ளியில் தமிழினிக்காகக் காத்திருந்தவர்கள் யாவர்?

2. தமிழ்ப்பாடம் முடிந்ததும் தமிழினியும் குழலியும் என்ன பயிலச் சென்றனர்?

3. பரதநாட்டியம் பயிலச் சென்ற தோழியின் பெயர் என்ன?

4. வீணை வகுப்பில் தமிழினி மகிழ்ந்தது ஏன்?

5. வீடு திரும்புமுன் தமிழினியும் அப்பாவும் எங்கே சென்றனர்?

குறள்:

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்** (அதிகாரம் 21 - குறள் 209)

*தன் மீது தானே அன்பு செய்பவராயின், எந்தவொரு தீச்செயலின் பக்கமும் நெருங்கக் கூடாது.*

*ஒருவன் தன்மீது தானே அன்பு கொள்ள வேண்டும். அப்படிக் கொள்வானாயின் அவன் எந்தவொரு தீய செயலையும் செய்ய முயலக்கூடாது. செய்தால் அவனைத் தீங்கு வந்தடையும்.*

தன்னைத்தான் காதலன் - தன்னை விரும்புபவன்

பழமொழி:

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

*(முயற்சி உயர்வைத் தரும்.)*

நொடி:

கழுத்து உண்டு, தலை இல்லை; உடல் உண்டு, உயிர் இல்லை; கை உண்டு, விரல் இல்லை.

பாடம்

# 3

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# தம்பிக்கு ஓர் அஞ்சல்

ஒஸ்லோ,

21.11.09

அன்பு நிறைந்த தம்பி கீரனுக்கு,

நாங்கள் நலம். உங்கள் நலம் அறிய ஆவல். நேற்று உங்கள் அஞ்சல் கிடைத்தது. அப்பாதான் முதலில் படித்தார். பெரியப்பா இப்போது நலம் அடைந்துவிட்டார் என்று எழுதியிருந்தீர்கள். அப்பாவுக்கு அது பெருமகிழ்ச்சிக்குரிய செய்தி. உங்கள் அப்பாவைப் பற்றிக் கதைத்துக்கொண்டே இருந்தார். பெரியப்பாதான் தன்னைப் படிப்பித்தவராம்.

கோடைகால விடுமுறைக்கு நாங்கள் எல்லோரும் அங்கே வர இருக்கின்றோம். நாங்கள் அங்கு பெரியப்பா பெரியம்மா, சிற்றப்பா சின்னம்மா, மாமா மாமி குடும்பத்தாருடன் சுற்றுலாச் செல்ல இருப்பதாக அப்பா கூறினார்.

உங்களுக்கு என்னென்ன விருப்பம் என்பதை எழுதுங்கள். என் பெற்றோர் பிறந்த எனது சொந்த ஊருக்கு வரப்போகிறேன். இவ்வளவு நாட்களும் உங்கள் அஞ்சல்களைத்தான் படித்தேன். அங்கு வந்து உங்களோடு நேரில் பேசப்போகிறேன். அதை நினைத்துப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

நாங்கள் விடுமுறையில் வருவது பற்றிப் பாட்டிக்கும் தெரிவியுங்கள். அவரும் எங்களைக் காண ஆவலாக இருப்பார். இங்கே எனது தோழி ஒருவருடைய பாட்டி வந்திருக்கிறார். நிறையக் கதைகள் சொல்வார். எனக்கும் எனது பாட்டியைப் பார்க்க ஆசையாக உள்ளது. அஞ்சல் கிடைத்ததும் விரைவாக மறுமொழி எழுதுங்கள்.

இவ்வண்ணம்,
அன்புடன்,
மணிமேகலை.

**விடை சொல்வோம்:**

1. யாருக்கு அஞ்சல் எழுதப்பட்டது?
2. யாரால் அஞ்சல் எழுதப்பட்டது?
3. மணிமேகலையின் அப்பாவைப் படிப்பித்தவர் யார்?
4 எந்த விடுமுறைக்கு மணிமேகலை தாயகம் செல்ல இருக்கிறாள்?
5. மணிமேகலையின் பாட்டி எங்கு இருக்கிறார்?

### அருஞ்சொல் விளக்கம்:

ஆவல் - பெருவிருப்பு
சுற்றுலா- காணுலா, மகிழ்வுலா

### நாலடியார்:

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக்கு உமியுண்டு நீருக்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

*நல்லவர் என நம்பி மிகவும் நட்புக் கொண்டபின், அவர் நல்லவர் அல்லர் என்று தெரிந்தாலும் பொறுத்துக் கொண்டு நட்புக் கொள்ள வேண்டும். ஏனெனில், எமக்கு அகத்தியமான நெல்லிலே கழிவான உமி இருக்கிறது. நீரின்றி எம்மால் வாழமுடியாது. அந்த நீரிலே அருவருக்கத்தக்க நுரை இருக்கிறது. மனதைக் கவர்கிற அழகிய நறுமண மலரின் பூவிதழ்களின் கீழே இழிவான முள் போன்ற இலை இருக்கிறது. எனவே, நல்லவர் என நாம் மிக விரும்பி ஏற்றுக் கொண்ட ஒருவரிடம் குறை இருந்தாலும் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்.*

*அகத்தியம் - இன்றியமையாதது*

### நொடி:

வீட்டுக்குள்ளே இருப்பான்; புதுமையாகப் பேசுவான்;
வந்தவரை வரவேற்பான்; வாசல் தாண்டமாட்டான்.

பாடம்

# 4

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# நண்பர்கள்

மகிழன்: வாருங்கள்! வாருங்கள்!

செழியன்: கால்வலி எப்படி இருக்கிறது மகிழன்?

மகிழன்: பெரிய முறிவு என்பதால் காலை அதிகம் ஆட்டி அசைக்க முடியவில்லை, செழியன்.

முகிலன்: எழுந்து நடமாட எத்தனை நாட்கள் பிடிக்குமாம்?

மகிழன்: குறைந்தது இரண்டு கிழமைகள்; அதற்குப்பிறகும் இரண்டு மூன்று கிழமைகள் ஊன்றுகோலோடு தான் நடமாட வேண்டுமாம் முகிலன்.

செழியன்: உங்கள் பள்ளிப் படிப்புப் தடைப்படப் போகிறதே!

மகிழன்: அம்மா அப்பாவுக்கு அதுவும் கவலை தான்.

முகிலன்: அதற்குத்தான் நாங்கள் ஒருவழி சொல்ல வந்திருக்கின்றோம்.

செழியன்: பள்ளி முடிந்ததும் நாங்கள் இரண்டு பேரும் இங்கே வருவோம். அன்றாடம் படித்ததை உங்களோடு சேர்ந்து படிப்போம்.

மகிழன்: மாலையில் உங்கள் விளையாட்டு நேரம் வீணாகி விடுமே!

முகிலன்: அதற்கென்ன, இரண்டு கிழமைகள்தானே!

மகிழன்: உங்கள் அப்பா அம்மா மறுக்க மாட்டார்களா?

முகிலன்: சேர்ந்து படிக்கப் போகின்றோம் என்றதும் அம்மாவுக்கு நல்ல மகிழ்ச்சி.

செழியன்: "நட்பு என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும்" என்று அவர் பாராட்டினார்.

மகிழன்: என்னுடைய அப்பாவும் அம்மாவும் இதைக் கேட்டால் பெரிதும் மகிழ்வர். உங்களைப் போன்ற நண்பர்கள் எனக்கு வாய்த்திருப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

**விடை சொல்வோம்:**

1. மகிழனின் நண்பர்கள் யாவர்?
2. மகிழனுக்கு ஏற்பட்ட துன்பம் என்ன?
3. மகிழன் இரண்டு கிழமைகளின் பின் எப்படி நடப்பான்?
4. மகிழனின் படிப்புக்கு அவனது நண்பர் எப்படி உதவுவர்?
5. 'நட்பு' என்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

அருஞ்சொல் விளக்கம்:

வாய்த்தல் - நன்கமைதல் வலி - நோவு

## குறள்:

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு.** (அதிகாரம் 78 - குறள் 788)

*ஆடை அவிழ்கிறவனுடைய கைபோல, (விரைந்து) நண்பருக்குத் வந்த துன்பத்தை நீக்குவதே உயர்ந்த நட்பாகும்.*

உடுக்கை - ஆடை
இடுக்கண் - துன்பம்

## பழமொழி:

**இனிய நண்பனை இடுக்கணில் அறியலாம்.**

*(உண்மை நட்பு.)*

## நொடி:

அடிமேல் அடிபட்டும் அயராத சின்னப்பையன்
குறிவைத்த இடம் பார்த்து, தப்பாமல் சேருவான்.

திருகோணமலை நானிலங்களும் கொண்ட பட்டினமாகும். இதற்கு வடக்கே 'புல்மோட்டை' என்னும் ஊர் உண்டு. அங்கே கடலலைகள் 'இல்மனைட்' (அறல்) எனப்படும் கனிப்பொருளைக் கொணர்ந்து கரையில் ஒதுக்குகின்றன. பண்டைய புகழ் கொண்ட திருகோணமலை, எம் தாயகத்தில் உள்ள பட்டினம் என்பது பெருமைக்குரியது.

### அருஞ்சொல் விளக்கம்:

செலவர் - தூர இடம் செல்வோர்.

துறைமுகம் - கப்பல்கள் தரித்து நிற்கும் இடம்.

குடாக்கடல் - மூன்று பக்கம் தரை சூழ்ந்த கடல்

### விடை சொல்வோம்:

1. திருகோணமலை எங்கே அமைந்துள்ளது?
2. திருகோணமலையில் வெந்நீர் ஊற்றுகள் எங்கே உள்ளன?
3. கோணேச்சுரம் சிவன்கோவில் யாரால் பாடப்பெற்றது?
4. திருமலையில் வந்து கடலில் கலக்கும் ஆறு எது?
5. மகாவலி ஆற்றின் நீரூட்டலால் திருகோணமலையில் பெருமளவில் விளைவது என்ன?
6. புல்மோட்டையில் கிடைக்கும் கனிப்பொருள் யாது?

பாடம்

# 5

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# ஆடிப்பிறப்பு

குயிலி : அப்பா! நாளைக்கு ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் என்று ஆசிரியை சொன்னார். அதை நாங்களும் கொண்டாடுகின்றோமா?

அப்பா: ஓம். குயிலி! தமிழருடைய கொண்டாட்டங்களிலே சிறந்தவை பொங்கலும் ஆடிப்பிறப்பும் தான். ஆடிப்பிறப்புக் கொண்டாட்டத்துக்குப் பல கரணியங்கள் உண்டு மகளே! காலபோக நெல்லை விதைக்கிற காலம் ஆடியாகும். 'ஆடிவிதை தேடிவிதை' என்று தமிழ்ப் பழமொழி கூறுகிறது. விதைப்புக்கான முதல் மழை ஆடியில் பெய்யும். முக்கனிகளும் முழுப்பயன் தருகிற காலம் ஆடித்திங்கள். அனைத்துக் கூலங்களும் விளைந்து, ஆனிக் கடைசியில் வீடு வந்துசேரும். ஆகையால் ஆடிப்பிறப்பை மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர்.

கம்பன் : அப்பா! நீங்கள் சின்னப்பிள்ளையாக இருந்தபோது ஆடிப்பிறப்பைக் கொண்டாடினீர்களா?

அப்பா : ஓம். கம்பன்! நான் உங்களைப் போலச் சிறுவனாக இருந்த காலத்தில், எல்லா வீடுகளிலும் ஆடிப்பிறப்பைக் கொண்டாடுவர். ஆனால் இக்காலத்தில் அதை மறந்து வருகின்றனர். முதல் நாளே வீடெல்லாம் துப்புரவாக்குவர். ஆடிப்பிறப்பன்று அதிகாலையிலேயே எழுந்து, வீட்டைப்

பெருக்கி, மஞ்சள் நீர் தெளித்து தூய்மைப்படுத்துவர். நாம் வைகறையில் எழுந்து, நீராடித் தூய ஆடை அணிவோம். கூலங்களில் வடை, கடலை, அவல், கொழுக்கட்டை போன்ற பலவகைப் பண்டங்கள் செய்வர். இவற்றுடன் முக்கனிகளும் வைத்திருப்பர். பண்டங்களை அயலவருடன் பகிர்ந்து உண்டு மகிழ்வோம்.

கம்பன்: ஆடிப்பிறப்பன்று இன்னும் வேறென்ன செய்வர்?

அப்பா: ஆடிப்பிறப்பன்று மாலையில் எல்லோரும் ஆடிக்கூழ் காய்ச்சிக் கூடியிருந்து குடிப்போம். அது ஆடிப்பிறப்பின் சிறப்பான ஒரு நிகழ்வாகும்.

**விடை சொல்வோம்:**

1. தமிழருடைய கொண்டாட்டங்களிலே சிறந்தவை எவை?
2. விதைப்புக்கான முதல்மழை பெய்யும் மாதம் எது?
3. ஆடிப்பிறப்பன்று செய்யப்படும் பண்டங்கள் எவை?
4. கூலங்கள் எந்த மாதத்தில் விளைந்து வீடு வந்து சேரும்?
5. ஆடிப்பிறப்பன்று எப்போது துயிலெழுந்து நீராடுவர்?
6. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

## அருஞ்சொல் விளக்கம்:

| | |
|---|---|
| அதிகாலை/வைகறை | - கீழ்வானம் வெளுக்கும் வேளை |
| முக்கனி | - மா பலா வாழை |
| கூலங்கள் | - நெல் சாமை வரகு போன்றவை |
| அறுவடை | - கதிர் அறுத்தல் |
| பெருக்குதல் | - கூட்டித் துப்புரவு செய்தல் |

## மூதுரை:

**அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு.**

*அடக்கமாக (அமைதியாக) இருப்பவர் அறிவற்றவர் என எண்ணி அவரை குறைவாக எண்ணவேண்டாம். ஏனென்றால், ஓடையிலே ஓடுகின்ற மீன்களை (சிறு மீன்களை) எல்லாம் ஓடவிட்டு, பெரிய மீன் வருமளவும் அமைதியாகச் சோர்ந்தது போல செயலில் கண்ணாக நிற்கும் கொக்கு.*

## நொடி:

**இரவெல்லாம் பூங்காடு பகலெல்லாம் வெறுங்காடு.**

பாடம்

# 6

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# முழவுகள்

பண்டைத் தமிழர் இசையின் நுணுக்கங்களை நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். இசைக்கருவிகளில் தோற்கருவிகள் ஒரு வகையாகும். தோற்கருவிகளை முழவுகள் என்பர். தோற்கருவிகளின் இசையெழுப்பும் பகுதி, விலங்குத் தோலினால் ஆக்கப்பட்டிருக்கும். முரசு, உடுக்கு, பறை, தப்பட்டை, தண்ணுமை, மேளம் என்பவை இன்றும் பயன்பாட்டில் இருக்கின்றன.

பறை தொன்மையும் சிறப்பும் உடையது. முன்னாளில் மங்கல நிகழ்வுகளை அறிவிக்கப் பறை அறைந்தனர். அரச கட்டளைகளை மக்களுக்கு அறிவிக்கப் பறை அறைந்தனர்.

முரசு பறையின் தன்மையை ஒத்தது. ஆனால், இதில் ஒரு பக்கம் மட்டுமே தோற்கண் உள்ளது. தமிழரின் பண்பாட்டில் முரசு சிறந்த இடம் வகித்தது. அரசன் படை நடத்திச் செல்லும்போது, போர்முரசு முழங்கியது. போர்முரசை 'படைமுரசு' என்றும் அழைத்தனர். முன்னாளில் திருமண விழாக்களில் மணமுரசு அறைந்தனர். அரசன் கொடை வழங்கும்போது கொடைமுரசு ஒலித்தது.

இன்று 'மிருதங்கம்' என்று அழைக்கப்படும் தோற்கருவியின் பண்டைப் பெயர் தண்ணுமை ஆகும். இன்றைய இசை

நிகழ்ச்சிகளிலும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளிலும் தண்ணுமைக்குச் சிறப்பிடம் உண்டு. மேளம் எமது மங்கல நிகழ்வுகளில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

**விடை சொல்வோம்:**

1. தோலினால் ஆன இசைக்கருவிகளை எப்படி அழைக்கலாம்?
2. ஒரு பக்கம் மட்டும் தோற்கண் உள்ள முழவு எது?
3. அரசன் படை நடத்திச் செல்லும் போது முழங்கிய முழவு எது?
4. மிருதங்கம் என்னும் முழவு எந்தெந்த நிகழ்ச்சிகளில் முதன்மை பெறுகிறது?
5. எமது மங்கல நிகழ்வுகளில் சிறப்பான இடத்தைப் பெறும் முழவு எது?

அருஞ்சொல் விளக்கம்:

தோற்கண் - ஒலியெழும் தோற்பகுதி

மங்கலம் - நன்னிகழ்வு

முழக்கல் - ஒலிப்பித்தல்

நுணுக்கம் - கூர்மை

## நாலடியார்:

**கல்வி கரையில கற்பவர் நாள்சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்**
**ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்**
**பாலுண் குருகின் தெரிந்து.**

*கல்வி கரையில்லாதது. கல்வி கற்க விரும்புவோரது வாணாளோ (வாழ்நாள்) கொஞ்சம். நினைத்துப் பார்க்கையில் நோய்கள் பல வந்து கற்கும் நாட்களைத் தடை செய்கின்றன. ஆகவே, தெளிவாக ஆராய்ந்து, தேவையானதைக் கற்க வேண்டும். எவ்வாறெனில், பாலிலுள்ள நீர்த்தன்மையைப் பிரித்து, பாலை மட்டும் உண்கிற அன்னம் போன்று .*

*குருகு - அன்னப்பறவை, நாரையினம்*
*தெள்ளிதின் - தெளிவாக*

## நொடி:

**ஐந்து வீட்டுக்கொரு முற்றம்.**

பாடம்

# 7

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# சிங்கமும் முயலும்

சிங்கம் ஒன்று காட்டினிலே
செருக்குடன் வாழ்ந்து வந்ததுவே!
வேண்டு மட்டும் விலங்குகளை
வீணாய்க் கொன்று போட்டதுவே!

நாளும் வீட்டுக் கொருவரென
தாங்கள் விருந்தாய்ச் செல்வதென்று
விலங்குகள் ஒன்றாய்க் கூடியொரு
விதியை வகுத்துக் கொண்டனவே!

சிங்க ராசா அதையேற்று
நாளும் ஒன்றை உண்டுவந்தார்.
அன்றொரு முயலின் முறைவரவே
முயலார் ஒருதிட்டம் போட்டாரே!

காலம் தாழ்த்திச் சிங்கத்திடம்
முயலார் மெல்லச் சென்றாரே!
காலம் தாழ்த்திய தேனென்று
முழங்கினார் சிங்க ராசாவும்

வரும்வழி தனிலே உம்போன்ற
வலிய சிங்கம் நின்றதனால்
பெரிதும் பயந்து ஒளித்திருந்து
பின்னர் வந்தேன் என்றதுவே!

எங்கே அந்தச் சிங்கத்தை
எனக்குக் காட்டு என்றவுடன்
அங்கொரு கிணற்றுள் உண்டென்று
அடக்கமாய் முயலார் சொன்னாரே!

சினமே கொண்ட சிங்கத்தார்
சீறியெழுந்து கிணற்றண்டை
ஓடிச் சென்று தன்நிழலை
உள்ளே நீரில் கண்டாரே!

இன்னொரு சிங்கம் கிணற்றுள்ளே
இருக்கிற தென்று நினைத்தபடி
முன்பின் எண்ணிப் பாராமல்
மூடச் சிங்கம் குதித்ததுவே!

குதித்த சிங்கம் இறந்திடவே!
குட்டி முயலை விலங்கெல்லாம்
மதித்துப் போற்றிக் கானகத்தில்
மகிழ்ந்து கூடி வாழ்ந்தனவே!

**விடை சொல்வோம்:**

1. காட்டு அரசனாக வாழ்ந்த விலங்கு யாது?
3. முயலார் தான் தப்ப என்ன திட்டம் போட்டார்?
4. சிங்கம் முயல் மீது ஏன் சினம் கொண்டது?
5. சிங்கம் கிணற்றினுள் ஏன் குதித்தது?
6. குட்டி முயலாரை மற்றைய விலங்குகள் ஏன் மதித்துப் போற்றின?

## குறள்:

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர் (அதிகாரம் 43 - குறள் 430)

*கல்வி அறிவுடையவர் ஒன்றும் இல்லாதவர் ஆயினும் எல்லாச் செல்வங்களும் உடையவர் போலாவார். அறிவற்றவர் எல்லாச் செல்வங்களும் இருந்தாலும் ஒன்றும் இல்லாதவரே.*

## பழமொழி:

பதறாத காரியம் சிதறாது.

*(அமைதி வெற்றி தரும்.)*


## நொடி:

எட்டாத தூரத்திலே, எவரும் இல்லாக் காட்டிலே,
எழிலான பெண்ணொருத்தி இரவெல்லாம் சிரிக்கிறாள்.

பாடம்

# 8

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.




## வாசிப்போம்:

# கிளித்தட்டு

விளையாட்டுகள் உடல் நலத்தையும் உளமகிழ்வையும் தருகின்றன. இதனை எமது முன்னையோர் நன்கு உணர்ந்திருந்தனர். வீரத்தையும் ஆற்றல்களையும் வளர்க்கும் விளையாட்டுகளை அவர்கள் ஒழுங்கமைத்திருந்தனர். கிளித்தட்டு, கிட்டிப்புள், சிலம்பம், வாரோட்டம் என்பவை எமது மரபுவழி விளையாட்டுகள். இவை விறுவிறுப்பான விளையாட்டுகளாகும். இன்றும் இவை நம் நாட்டில் விளையாடப்படுகின்றன.

கிளித்தட்டு விளையாடுவோர், இரு கன்னையாகப் பிரிந்து நிற்பர். ஒரு கன்னை தட்டினுள் இறங்க, மற்றக்கன்னை அதை எதிர்த்து மறிக்கும். மறிக்கும் கன்னையின் தலைவரை 'கிளி' அல்லது 'தாய்ச்சி' என்று அழைப்பர். சுற்றிவர உள்ள எல்லைக் கோடுகளும் நடுக்கோடும் கிளி ஓடும் கோடுகளாகும். கிளி ஓடும் கோடுகளுக்கும் குறுக்குக் கோடுகளுக்கும் இடைப்பட்ட பகுதியைத் தட்டு என்பர். தட்டு மறிப்பவர் குறுக்குக் கோட்டில் நிற்பார். முன்புறமிருந்து இறங்கும் கன்னையரைக் 'காய்' என்பர். அவர்கள் இறுதித்தட்டைக் கடந்ததும் 'பழம்' ஆவர். பழங்கள் பின்புறமிருந்து முன்னோக்கி வரும்போது, ஒரு தட்டுக்குள் காயுடன் கலந்தால் ஆட்டம் இழப்பர். பழமாக முன்னேறுபவர் முன் எல்லையைத் தாண்டி வெளியேற வேண்டும். தட்டு மறிப்பவர், தாம் காக்கும் குறுக்குக் கோட்டை எதிர்க் கன்னையர் கடக்கும்போது மட்டுமே அவர்களை அடிக்கலாம். கிளி

எந்த நிலையிலும் கைக்கு எட்டினால் அடிக்கலாம். அடிபட்டதும் ஆட்டம் முடியும். இறங்கிய கன்னை தொடக்கக் கோட்டை, பழமாகத் தாண்டினால் அது வெற்றி பெறுகிறது.



**விடை சொல்வோம்:**

1. எமது மரபு விளையாட்டுகளில் விறுவிறுப்பான ஒன்று எது?
2. கிளித்தட்டில், மறிக்கும் கன்னையின் தலைவரை எப்படி அழைப்பர்?
3. கிளி ஓடும் கோடுகள் எவை?
4. தட்டு மறிப்பவர் எங்கே நிற்பார் ?
5. முன்புறமிருந்து இறங்குபவர் காயா பழமா?
6. தட்டுமறிப்பவர் எதிர்க்கன்னையரை எப்போது அடிக்கலாம்?

## அருஞ்சொல் விளக்கம்:

மரபுவழி - வழிவழித் தொடர்பு

கன்னை - குழு

## மூதுரை:

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

*தாழம்பூவின் இதழ் பெரியது. மகிழம்பூ சிறியது. ஆனால், அது தாழையிலும் இனிய நறுமணம் உடையது. எனவே, எவரையும் உருவத்தால் சிறியர் என்று குறைவாக எண்ணவேண்டாம். கடல் பெரியது. அதன் நீர் மண்ணுக்கும் பயன்படாது. ஆனால், கடலருகே ஊறுகிற சிறிய நன்னீர் ஊற்று மண்ணுக்கு மட்டுமல்ல உண்ணும் நீராகவும் பயன்படும்.*


## நொடி:

அந்தரத்திலே பறக்கும், பறவையும் அல்ல
அழகான வால் உண்டு, அணிலும் அல்ல.

பாடம்

# 9

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்!



## வாசிப்போம்:

# திருகோணமலை

இலங்கையின் கிழக்குத் திக்கில் இலங்கும் பட்டினம் திருகோணமலை. இப்பட்டினம் திரிகோணமலை, திருமலை, கோணமாமலை எனப் பல பெயர்களால் அழைக்கப்படும். உலகின் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் திருகோணமலைத் துறையும் ஒன்று. இத்துறைமுகம் ஆழமான குடாக்கடற் பகுதியாகும். இது மலைத்தொடரால் உள்வளைக்கப்பட்டு அமைந்துள்ளது. இது உலகின் கப்பல் போக்குவரத்தில் முன்னணித் துறைமுகங்களுள் ஒன்றாக விளங்குகிறது.

இத்துறைமுகப் பகுதியில் 'கரிமலையூற்று' என்னும் இடம் உண்டு. அங்கே, கடலுள் மேலெழுந்துள்ள பாறையில், நன்னீர் ஊற்று ஒன்று உள்ளது. சுற்றுலாச் செலவரைக் கவரும் கன்னியாய் வெந்நீர் ஊற்றுகள் திருமலையில் உள்ளன. இந்த ஏழு வெந்நீர்க் கிணறுகளையும் இராவணன் தன் தாயின் ஈமக் கடன்களுக்காகத் தோண்டினான் என்று வழிவழிக் கதைகள் கூறுகின்றன. இராவணன் என்பவன் வீரம் பொருந்திய பண்டைத் தமிழ் வேந்தன்.

மகாவலிஆறு திருமலையில் வந்து கடலில் கலக்கிறது. இவ்வாற்றின் நீரூட்டலால், திருகோணமலை சிறந்த நெல்விளையும் பழனங்களைக் கொண்டுள்ளது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற கோணேச்சுரம் சிவன்கோவில் இங்கு உள்ளது.

## அருஞ்சொல் விளக்கம்:

| | | |
|---|---|---|
| திக்கில் | - | திசை |
| இலங்கும் | - | விளங்கும் |
| பழனங்கள் | - | வயல்கள் |
| நானிலங்கள் | - | மலை காடு வயல் கடல் |
| பட்டினம் | - | கடற்கரை நகரம் |
| ஈமக்கடன் | - | இறுதிச்சடங்கு |

## குறள்:

**ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே**
**வேந்துஅமைவு இல்லாத நாடு** (அதிகாரம் 74 - குறள் 740)

*நாட்டில் மக்களுக்கு வேண்டிய எல்லா வளங்களும் இருந்த போதிலும் அதனால் பயனில்லை. அரசு நல்லரசாக அமையாத நாட்டில்.*

## பழமொழி:

**தனிமரம் தோப்பாகாது.**
*(கூட்டுமுயற்சியின் பயன்.)*

## நொடி:

ஓடோடும் சங்கிலி; உருண்டோடும் சங்கிலி;
பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி.

பாடம்

# 10

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# அவர்கள் தந்த மரம்

காகம் ஒன்று ஆலமரத்தில்
வந்து அமர்ந்தது.
கனிந்து சிவந்த பழங்கள் தம்மைக்
கொத்தித் தின்றது.

வேக மாகச் சிறகடித்துப்
பறந்து சென்றது.
வெட்டவெளியில் ஓரிடத்தில்
எச்ச மிட்டது.

எச்சத் துடனே தரையில் வீழ்ந்த
ஆலம் விதைகளில்
இரண்டு கிழமை சென்ற பின்னர்
ஒன்று முளைத்தது.

கோடை நாளில் குடையைப் போல
நிழலைத் தந்திடும்.
கூட்டம் நடத்த மண்டபம்போல்
என்றும் உதவிடும்.

ஆடிப் பாடச் சிறுவ ருக்கும்
அரங்கமாகிடும்.
அருமை யான ஊஞ்சலாக
விழுது மாறிடும்.

சின்ன விழுது பல்துலக்கத்
நாளும் உதவிடும்.
தேடி வந்து பறவை யெல்லாம்
கூடு கட்டிடும்.

இன்னும் நூறு நூறு விதத்தில்
நன்மை செய்திடும்.
இந்த மரத்தின் பெருமை கூற
எவரால் முடிந்திடும்?

விதையைப் போட்டுச் சென்ற காகம்
எங்கு திரியுமோ?
வேலி போட்டு வளர்த்த மனிதர்
எங்கு வாழ்வரோ?

உதவி பலவும் செய்யும் மரத்தை
நமக்குத் தந்தவர்
உலகில் எங்கே இருந்த போதும்
வாழ்க வாழ்கவே!

அழ. வள்ளியப்பா

**விடை சொல்வோம்:**

1. ஆலம் விதைகளில் ஒன்று எவ்வளவு காலத்தில் முளைத்தது?
2. ஆலமரம் கோடைநாளில் குடையைப் போல எதைத் தரும்?
3. சிறுவர் விளையாட ஆலமரத்தில் ஊஞ்சலாகப் பயன்படுவது எது?
4. நாளும் பல் துலக்க உதவுவது எது?
5. பறவை எல்லாம் கூடிவந்து எந்த மரத்தில் கூடுகட்டும்?
6. விதையைப் போட்டுச் சென்றது எது?

## அருஞ்சொல் விளக்கம்:

அரங்கம் - மேடை
எச்சம் - மிச்சம்
கனிந்து - நன்கு பழுத்து
விழுது - மரத்தின் கிளையில் இருந்து மண்ணை நோக்கிச் செல்லும் வேர்

## மூதுரை:

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி**
**என்று தருங்கொல் எனவேண்டா - நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்.**

*ஒருவருக்கு நன்மை செய்தால், அதன் பயன் எப்போது திரும்பக் கிடைக்கும் என எண்ணவேண்டாம். உறுதியுடன் உயர்ந்து வளர்கிற தென்னை வேரால் தானுண்ட நீரை, தன் வட்டில் உள்ள இளநீராய்த் தருவது போல் என்றோ ஒருநாள் பயன் கிடைக்கும்.*

தெங்கு - தென்னை
தாள் - அடி (வேர்)
தளரா - உறுதியான

## நொடி:

ஓடிக்கொண்டே இருக்கும்; கிள்ளவும் முடியாது;
வெட்டவும் முடியாது.

பாடம்

# 11

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



## வாசிப்போம்:

# பலசரக்குகள்

தமிழர் காலங்காலமாகத் தங்கள் உணவு வகைகளில் பலசரக்குகளைச் சேர்த்து வருகின்றனர். இன்று உலக மக்களும் அவற்றை விரும்பிப் பயன்படுத்துகின்றனர்.

பலசரக்குகள் சுவைக்காக மட்டும் அல்லாது உடல் நலத் தேவைக்காகவும் சேர்க்கப்படுகின்றன. இவை நிலத்திணையில் (தாவரத்தில்) இருந்து பெறப்படும் இயற்கை மருந்துகளாகும். தனித்த மருத்துவப் பண்பு கொண்ட இவை, உடல் உறுப்புகளுக்கு உறுதியை வழங்கி உடலைப் பேணுகின்றன.

மல்லி, சீரகம், மிளகு, உள்ளி என்பன மிளகுநீர்ச் (இரசச்) சரக்குகள் ஆகும். ஓமம், வேர்க்கொம்பு, முடக்கொத்தான், இஞ்சி போன்றவை மருந்தாகப் பயன்படும் சரக்குகளாகும்.

எமது வீடுகளில் தாளிதத்துக்குக் கடுகு, வெந்தயம், சீரகம், கறிவேப்பிலை என்பன பயன்படுகின்றன. ஏலம், கராம்பு, கறுவா, மஞ்சள் போன்றவை கமழ்வுக்காகவும் உணவு பழுதடையாமல் இருப்பதற்காகவும் சேர்க்கப்படுகின்றன.

முன்னாளில் ஐரோப்பியர் பலசரக்குகளை வாங்க ஆசிய நாடுகளுக்கு வந்தனர். அவர்கள் காலப்போக்கில் அந்நாடுகளைக் கைப்பற்றித் தமதாக்கினர்.

பலசரக்குகளை உணவில் சேர்த்து இயற்கை வழியில் உடல் நலம் பேணுவது சிறந்தது என்பதை உலகம் இன்று உணர்ந்திருக்கிறது.

**விடை சொல்வோம்:**

1. உடல்நலத் தேவைக்காக உணவில் சேர்க்கப்படுபவை எவை?
2. மிளகுநீர்ச் சரக்குகள் எவை?
3. உணவு பழுதடையாமல் இருப்பதற்குச் சேர்க்கப்படும் சரக்கு ஒன்று எது?
4. மருந்தாகப் பயன்படும் சரக்கு ஒன்று தருக?
5. பலசரக்குகளை வாங்குவதற்காக ஆசிய நாடுகளுக்கு வந்தோர் யாவர்?

குறள்:

மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (அதிகாரம் 95 - குறள் 942)

*மருந்தே வேண்டியது இல்லை. உடலுக்கு அருந்திய உணவு செரித்து விட்டதா என உணர்ந்து மீண்டும் உண்டால்.*

பழமொழி:

அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடாதே.

*(உதவியவருக்குக் கேடு செய்யாதே.)*

நொடி:

ஆடை உடுத்திருக்கும், பெண்ணுமல்ல
அதனுள்ளே முத்து இருக்கும், சிப்பி அல்ல
தாடி உண்டு, மீசை உண்டு, கிழவன் அல்ல
தக்கதோர் உணவாகும் மக்களுக்கு.

# நீர்வாழ்வன

ஆசிரியர்: பிள்ளைகளே! இன்று நாங்கள் நீர்வாழ்வன பற்றிப் பேசுவோம். நீரை நன்னீர், உவர்நீர் என இரண்டாகப் பிரிக்கலாம். தரையில் வாழும் இயற்கைச் செல்வங்களான உயிரினங்களுக்கு நன்னீர் மிகவும் தேவையானது. நாம் பருகுவது நன்னீராகும். உவர்நீரைக் கொண்டுள்ள கடலிலும் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. நமக்குக் கடல் மிகச் சிறந்த சத்துணவுகளை அளவின்றி வழங்குகிறது. கடல் நீரில் உப்பு மிகுதியாகச் செறிந்துள்ளதால், நாம் அதைப் பருகுவதில்லை. பிள்ளைகளே! உங்களுக்குத் தெரிந்த கடல்வாழ் உயிரினங்கள் சிலவற்றைச் சொல்லுங்கள், பார்க்கலாம்!

மாணவி: நண்டு, இறால், மட்டி, சுறா, திமிங்கிலம்.

மாணவன்: கடற்பன்றி, ஆமை.

ஆசிரியர்: ஓம். நல்லது பிள்ளைகளே! நண்டு, இறால், மட்டி போன்றவை ஓட்டு உயிரிகள் ஆகும். கடல்நாய், ஆமை போன்றவை நீரில் வாழ்வதோடு நிலத்திலும் நெடுநேரம் வாழக்கூடியவை. அதேபோல நிலத்தில் வாழும் பறவைகள் சில, நீர்நிலைகளிலும் நீண்ட நேரம் தங்கியிருக்கக் கூடியவை. நீர்க்காகம், நாரை, கொக்கு, தாரா போன்றவை அவற்றுள் சிலவாகும். மீன் ஒவ்வொரு தடவையும் எண்ணிறைந்த குஞ்சுகளைப் பொரிக்கும். மீன்களில் மிகப் பெரியது திமிங்கிலம்.

மாணவன் : கடலின் அடியில் வெவ்வேறு உருவமுள்ள மீன்கள் பல வண்ணவண்ண அழகிய மீன்கள்! பார்க்கப் பார்க்க ஆசையாக இருந்தது. நேற்று நான் தொலைக்காட்சியில் பார்த்தேன்.

ஆசிரியர்: அப்படியா! நாங்கள் ஒரு தடவை நீருயிரித் தோட்டத்துக்குச் செல்வோம் பிள்ளைகளே!

மாணவி : நீரில் நிலத்திணைகள் (தாவரங்கள்) வாழ்கின்றனவா ஐயா?

ஆசிரியர் : ஓம். அது இயற்கையின் புதுமை! நீங்கள் அடுத்த வகுப்புக்கு வரும்போது, நீர்வாழ்வன பற்றிய குறிப்புகளைத் திரட்டி வாருங்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒப்படை ஒன்றைத் தயாரிப்போம்.

**விடை சொல்வோம்:**

1. நீரை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
2. மண்ணில் இயற்கை உயிரினங்கள் வளர்வதற்குப் பயன்டும் நீர் எது?
3. கடல் நீரில் மிகுதியாகச் செறிந்துள்ளது என்ன?
4. நண்டு, இறால், மட்டி போன்றவற்றை எப்படி அழைப்பர்?
5. நீர், நிலம் இரண்டிலும் வாழக்கூடிய உயிரினங்கள் எவை?
6. மீன்களில் மிகப் பெரியது எது?

### அருஞ்சொல் விளக்கம்:

| | |
|---|---|
| உவர்நீர் | - உப்புச் சுவையுள்ள நீர் |
| செறிவு | - நெருக்கம் |
| ஒப்படை | - திரட்டுக் குறிப்பு |
| நீருயிரித் தோட்டம் | - நீர்வாழ்வன காட்சியகம் |

### குறள்:

**தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**
**இன்னுயிர் நீக்கும் வினை** (அதிகாரம் 33- குறள் 327)

*தன் உயிர் நீங்கினும் செய்ய வேண்டாம்.*
*தான் பிறிதொன்றின் இனிய உயிரை நீக்கும் செயலை.*

### *பழமொழி:*

**எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.**

*(சிறிதாயினும் தனக்கென ஒரு வாழிடம் வேண்டும்.)*


### நொடி:

ஓடுவான்; பறப்பான்; ஒற்றைக் காலில் நிற்பான்.

பாடம்

# 13

**பேசுவோம்:** படத்தைப் பார்த்துக் கலந்து பேசுவோம்.



# சி.வை.தாமோதரம்பிள்ளை

இலங்கையில் உள்ள சிறுப்பிட்டி என்னும் ஊரில் 1832ம் (ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து இரண்டு) ஆண்டு தாமோதரம்பிள்ளை பிறந்தார். இவரது தந்தை பெயர் வைரவநாதர். தாய் பெயர் பெருந்தேவி அம்மையார். அக்காலத்தில் கிறித்தவ கழகக் கல்வி நிலையங்களே மேலோங்கி இருந்தன. அதனால், ஆங்கிலக் கல்வியும் மேலை நாட்டுப் பண்பாடுமே செல்வாக்குப் பெற்றிருந்தன. கற்றவர்களில் மிகச் சிலரே தமிழைப் போற்றி வந்தனர்.

தாமோதரம்பிள்ளை ஆங்கிலக் கல்வியோடு தமிழையும் கற்றார். பள்ளிக் கல்வியை யாழ்ப்பாணத்தில் முடித்துக்கொண்டு தமிழ்நாடு சென்றார். அங்கே சென்னைப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார்.

தாமோதரம்பிள்ளை ஆசிரியப்பணி தொடங்கி, அறமன்ற நடுவர் பதவிவரை பல பொறுப்புகளை வகித்தார். இவர் தமிழகத்தில் நாளிதழ் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

தாமோதரனார் தமிழ்மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். பெரும் பொறுப்புள்ள பணிகளுக்கிடையிலும் தமிழுக்காகப் பாடுபட்டார். கவனிப்பாரற்றுக் கிடந்த பழந்தமிழ்நூல்களான ஏட்டுச்சுவடிகளைத் தேடித் திரட்டினார். அவர் திரட்டிய சுவடிகள் பல கறையான் அரித்து இருந்தன. அவற்றை எடுக்கையில் கரைகள் உடைந்து உதிர்ந்தன. அவற்றையெல்லாம் அரும்பாடுபட்டுப் பேணி ஒழுங்குபடுத்தி அச்சேற்றினார். அத்துடன் அவர் நீதி நெறி விளக்கம் எனும் நூலையும் எழுதினார். தாமோதரனாருடைய முயற்சி

இன்றேல், இன்றுள்ள பழந்தமிழ் இலக்கியங்கள் பல எமக்குக் கிடைக்காமல் அழிந்திருக்கும்.

அவர் தமிழ்க்கல்வியை மேம்படுத்தும் பொருட்டு 'சைவப்பிரகாச வித்தியாசாலை' என்ற பள்ளியை ஏழாலையில் நிறுவினார். இப்பணிகளை எல்லாம் தனது பணத்திலேயே செய்தார். ஒரு சில நல்லவர்கள் அவரது அரும்பணியைக் கண்டு, சிறிது பண உதவி செய்தனர். தாமோதரனார் தமிழுக்கும் தமிழருக்கும் செய்த தொண்டு மிகப் பெரிது. அவரது பெயரும் புகழும் தமிழ் உள்ளவரை நின்று நிலைக்கும்.

**விடை சொல்வோம்:**

1. தாமோதரம்பிள்ளை எந்த ஊரில் பிறந்தார்?
2. அக்காலக் கல்விமுறையில் எவையெவை செல்வாக்குப் பெற்றிருந்தன?
3. தாமோதரம்பிள்ளை பட்டக் கல்வியை எங்கே பெற்றார்?
4. தாமோதரம்பிள்ளை வகித்த மிக உயர்ந்த பொறுப்பு என்ன?
5. தாமோதரம்பிள்ளை ஏழாலையில் நிறுவிய பள்ளியின் பெயர் என்ன?
6. தாமோதரனார் செய்த மிகப்பெருந் தமிழ்த்தொண்டு எது?

**குறள்:**

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.** (அதிகாரம் 10 - குறள் 100)

***இனிய சொற்கள் இருக்கக்கூடியதாக, இனிமையற்ற கடுஞ்சொற்களைப் பேசுவது, இனிய பழம் இருக்க, கசக்கும் காயை விரும்புவது போன்றதாகும்.***

**பழமொழி:**

**பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்.**
***(சார்ந்ததன் தன்மையைப் பெறுதல்)***

**நொடி:**

**நான்கு கால் உண்டு; நாற்காலி அல்ல.**
**மேலே விரிப்பு உண்டு; பல்லக்கும் அல்ல.**

consonant - மெய்எழுத்து.

literary Tamil. - இயல்